# நறுவிசு

அப்பப்பா! இப்படியும் தான் ஒரு சுத்தம் வேணுமா? ஒழுங்கு அவசியமா? எதுவும் மிதமிஞ்சினால் தொல்லைதானே?

என்னால் இந்தத் தொல்லை பொறுக்கவே முடியவில்லை இப்படியா நறுவிசு நறுவிசு என்று பிராணனை வாங்குவாள் ஒரு மனைவி! அவளுந்தான் தன்னுடைய பிராணனையும் விட்டுக்கொள்ளுகிறாளாம். எனக்குச் சொல்லிச் சொல்லி மாளுகிறாளாம்! அப்படித்தான் அவஸ்தைப்படுவானேன்! இதை அவளிடம் கேட்டால் 'இதற்காகத்தானே வீட்டிலே ஒரு பெண் வேணும், குடும்பம் நறுவிசாக நடக்க!' என்று பதில் வருகிறது!

நறுவிசு, நறுவிசு என்று சொல்கிறாளே!

அழகு, வசதி என்ற வார்த்தைகளுக்கும், நறுவிசு என்னும் நாராச வார்த்தைக்கும் கொஞ்சமாவது சம்பந்தமோ, ஒற்றுமையோ தெரிகிறதா? நறுவிசு என்கிற வார்த்தைக்கும் நாராசம் என்னும் சொல்லுக்கும் தான் தோது இருக்கிறது!

சோப்புப் பெட்டியோ தீப்பெட்டியோ கொஞ்சம் இடம் மாறிவிட்டால் போதும்! "அதது இடத்திலே இருந்தால்தான் நறுவிசாயிருக்கும்; இல்லாட்டா . . . " என்று கூறிக்கொண்டே அவற்றை இடம் பார்த்து வைப்பாள்; அந்தச் சிறு மர ஸ்டாண்டு மேலே இருந்த சோப்புப் பெட்டி. அரை கஜம் தள்ளியிருக்கும் பிரையில் இருப்பதிலே தவறு என்னவோ? அவசரக் காரியமாகப் போகும்பொழுது கையிலிருக்கும் வேண்டாத காகிதத்துண்டைக் கசக்கி, கம்பத்தின் ஓரம் போட்டுவிட்டுப் படியிறங்கியிருப்பேன் ரொம்பக் காரியமாக அதை எடுத்துக்கொண்டு உள்ளே போய், காகிதக் கூடையில் போடுவாள்.

இவை கூடத் தேவலை; என் தவறு இதிலே உண்டு என்றாவது சமாதானம் தேடிக்கொள்ளலாம். அவள் என்னுடன் வாழ்க்கை நடத்த வந்த புத்தம் புது நாட்களில், அவளுடைய இந்த மாதிரிச் செயல்களிலே பெருமையே அடைந்திருந்தேன் என்பதையும் ஒப்புக்கொள்கிறேன். அவளுடைய பார்வை சதா சர்வதா என்னைக் தொடர்வதையே அந்தச் செய்கைகள் நிரூபிக்கின்றன என நான் மகிழ்ந்ததிலேயும் தவறு இல்லை. ஆனால், இந்த மாதிரி நிலைமை, நான் சந்தோஷித்து நிலைமை, முற்றுப் பெறும்படியாயிற்று. ஏனென்றால் அவளுடைய சுத்த - வெறி சுத்த மோசமாக முற்றிவிட்டது!

ஒரு செம்பு நீர் எடுத்து கைகால் அலம்பிக்கொண்டு இப்பால் வந்திருப்பேன் - உடனே உள்வராந்தாவில் விளக்குமாறு ஓசை கேட்கும். வராந்தாவிலே இரண்டு இடங்களில் சிமிண்ட்த் தரை கொஞ்சம் அமுங்கியிருக்கும். அங்கே ஓடித் தங்கிவிட்ட ஜலத்தை இவள் விளக்குமாறு போட்டுத் தள்ளிவிட்டுச் சுத்தம் செய்வாள் இதைக் கவனித்துவிட்டு நானும் நாலு நாள்வரை ஒன்றும் சொல்லாமல் இருந்தேன். அவளும் அப்படியே செய்து வந்தாள். கடைசியில் எனக்கே பரிதாபமாக இருந்தது. "அது பாட்டுக்கு இருக்கட்டுமே! அரை மணியில் வெய்யில் அங்கு வந்ததும், அந்தக் கொஞ்ச ஜலம் வற்றிவிடுகிறது!" என்றேன். ஐந்தாறு நாட்கள் இப்படிச் சொன்னேன். அவளும் அந்தப் பேச்சைக் கேட்காமற் போகவே, ஒரு நாள் கோபித்தேன்: "அந்தத் துளி ஜலம் உன்னை என்ன பண்ணிவிடும்?" என்று கேட்டேன்.

"நீங்களாவது கொஞ்சம் தள்ளி நின்று வராந்தாவின் கீழே ஓரோர்காலாக நீட்டி ஜலம் விட்டு அலம்பிக் கொள்ளலாம் - அப்போ காலலம்பும் ஜலம் இங்கே ஓடாது!" என்றாள். ஓஹோ!" என்று தோன்றியது.

ஆனால், அவள் சொன்னமாதிரி புது முறையில் கால் அலம்பும் வழக்கம் எனக்கு வரவேயில்லை! கால் அலம்புவது என்றால், பாதத்தின்மேல் பாதம் போட்டுத் தேய்த்து அலம்பினால் தான் எனக்குத் திருப்தி! எனக்கும் இந்த வழக்கம் போகவேயில்லை. அவள் துடைப்பக்கட்டையுடன் உடனே வராந்தாவில் நுழையும் வழக்கமும் போகவேயில்லை.

நான் கண்ட மாறுதல் இதுதான்.

"ஐயோ பாவம் என்று இருந்தால் உங்களுக்காவது இந்த வழக்கம் வரணும்! அது முடியல்லையே! நான்தான் பொம்மனாட்டி, நறுவிசாக இருக்கணுமே என்று இதுமாதிரி கவனிச்சிக்கணும்! கவனிச்சுக்கிறேன்!" முக்கால் வாசி நாளும் தினமும் மூன்று வேளைகளில் இரண்டு வேளைகள் சொல்லுவாள்! கடைசியில் நான் தான் குற்றம் செய்தவன்!

எண்ணெய் தேய்த்துக் கொள்ளும்பொழுது உட்காரும் தனிப்பலகை, எண்ணெயாக ஆகிவிட்டதே என்று அதைச் சீயக்காய் போட்டுத் தேய் தேய் என்று தேய்த்து வைப்பாள்! "எண்ணெய் தேய்த்துகொள்ள என்றுதான் அதைத் தனியாக உபயோகிக்கிறோமே! சாப்பிட உட்காரத்தான் வேறு பலகைகள் இருக்கின்றனவே! இந்த எண்ணெய்ப் பலகையை நாலு வாரத்திற்கு ஒருமுறை சோடா போட்டுத்தேய்த்தால் போதாதா? அதற்காக இப்படி உயிரை விடுவானேன்?" என்று கேட்டால், அதற்குத் தகுந்த பதில் வராது.

'நீங்களாவது எண்ணெய் சிதறாமல் ஜாக்கிரதையாகத் தேய்த்துக்கொள்ளணும்! எண்ணெய்த் தலையில் தட்டுத் தட்டு என்று தட்டித் தேய்த்துக் கொண்டால்தான் உடம்பிலும் தலையிலும் எண்ணெய் இறங்கும் என்று என் தாத்தா கற்றுக்கொடுத்தபடி எண்ணெய்க்குளி குளிக்கும் வழக்கம் எனக்குச் சிறுவயதுமுதலே. எப்படி இந்தப் பழக்கம் போகும்?

என் மேஜையருகும் விஜயம் செய்தது அவள் சுத்தம்! மேஜையைத் தினமும் துடைக்க வருவாள். அதன் பலன் தினமும் ஏதாவது ஒரு கடிதமோ, குறிப்போ, ரசீதோ காணாமற் போய்விடும்!

மேஜைமேலே எனக்கு வேண்டிய பைல், பேனா, காகிதம், ரூல்கட்டை, டயரி, கடிதங்கள் வைத்திருப்பேன்.

"அலமாரியிலே இந்தக் தட்டிலே வைத்துக்கொள்ளுங்களேன்! எவ்வளவு விசாலமாயிருக்கு அலமாரித்தட்டு. அவற்றை இங்கே வைத்துக்கொண்டால் மேஜை எவ்வளவு நறுவிசாக இருக்கும்!" என்பாள் அவள்!

நாற்காலியும் மேஜையும் எதற்காக? வெறுமனே காட்சிக்கா? வேண்டியவற்றை மேஜைமேல் வைத்துக் கொள்ளவும், நாற்காலியில் கம்மென்று உட்கார்ந்ததும் ஜாம் என்று வேலை துவக்கவும்தானே இரண்டும் ஒருமிக்க வாங்கினேன்? மேஜைக்குச் சோபிதம், மேஜைக்குரிய வஸ்துக்களும் அவற்றின் முக்கியத்துவமுமேயன்றோ?

இதைச் சொன்னால் 'நீட்'டாக இருக்க வேண்டாமா மேஜை? அதற்கு மேலே போட்டிருக்கிற விரிப்பும் அழகாகத் தெரியவேண்டாமா?' என்று பதில் பறக்கிறது!

கார்டுகள், கவர்கள், தபால் தலைகள் எல்லாம் ஒரு சிறு பெட்டியில் போட்டு, மேஜைமேல் வைத்திருப்பேன்.

'இதோ, இப்படி இருந்தால் எவ்வளவு சௌகரியம்? கார்டுகள் நிறைய எழுதுவோம்! அவை மேலாக இருக்கட்டும்! கவர்கள் அதிகம் எழுதமாட்டோம்! அவை அடுத்தாற்போல் இருக்கட்டும்! தபால் தலைகள் அவற்றுக்கும் அடியில் கிடக்கட்டும்! என்பாள்! அடுக்கி வைப்பாள்.

ஐயோ! ஓரோர் தடவையும் இதை அடுக்கி வைத்து அழகு பார்க்கும் நேரத்தில், நமக்கு வேண்டிய கார்டோ, கவரோ, தபால் தலையோ அகப்பட்டுவிடாதா? எல்லாவற்றையும்தான் அடக்கமாக ஒரு பெட்டிக்குள் போட்டிருக்கிறேனே, இந்த ஒழுங்கு போதாதா? வசதி போதாதா? நேரம் விணாக்குவதுதானே முட்டாள்தனம்! பொழுதுதானே பொன்போன்றது?

மேஜையருகு அமர்ந்து, எழுதும் கடிதத்தை உடனே கவரினுள் போடலாம் என்றுகூட ஆசைப்பட முடியாதபடி, கவர், கார்டு அடங்கிய பெட்டி அலமாரியினுள் போய்விட்டதே அப்புறம்?

மேஜை டிராயருக்குள் சிறு சிறு பண்டங்கள் போட்டிருக்கிறேன்; நூற்கண்டு, பொத்தான், கத்தரிக்கோல், கோந்துக்கட்டி, நாய்த்தோல் இத்தியாதி... எல்லாம் கொலுவைத்தாற்போல

இருக்கணுமாம்! அட கடவுளே! மேஜையோடு ஒட்டினாற்போல மறைந்து, ஓர் இழுப்பறை எதற்கு இருக்கிறது? விசாலமாகத் தட்டுப்போல அதை இழுத்ததும் பளிச்சென்று வேண்டிய பண்டம் கண்ணில்படுகிறதே!

அவளுக்குப் பிடித்திருந்த 'நறுவிசு' நோய் என்னை இந்தப் பாடுபடுத்தியதைத்தான் நான் பொறுக்கக் கூடவில்லை.

"ரொம்ப சுத்தம் சுத்தம் என்று இப்படி அலட்டிக்கொண்டால், அப்புறம் உடம்பு கெட்டே போகும். தெரியுமா?" என்று பயமுறுத்தினேன்.

"என்ன, படிச்சவர் நீங்கள்கூட இப்படிப் பேசினால் அழகுதான்!" என்று தாக்கினாள் அவள்.

"ஆமாம்! மிதமிஞ்சிப் போய்விட்டால் இப்படித்தான் சொல்லவேண்டியிருக்கு!" என்றேன்.

"உங்கள் வீட்டிலே அசட்டுப் பிசட்டு ஆசாரம்தானோ? 'நீட்நெஸ்' 'கீட்நெஸ்' கிடையாதோ?" என்று கேட்டாள் அவள்.

'இதுவும் ஒரு அசட்டுப் பிசட்டுச் சுத்தம்தான்!' நீட்நெஸ்' நான்ஸென்ஸாகி இருக்கு!' என்று மனசுக்குள் எண்ணிக்கொண்டேன்.

கடைசியிலே மூளையையெல்லாம் ஒன்றுகூட்டி யோசித்ததில் கொஞ்சம் சரக்கு எனக்கும் பேசக் கிடைத்தது. இல்லம், இல்லாள் எல்லாம் எனக்கு இருந்தும் ஏன் எதுவுமே இல்லாதவன்போல நான் இருக்கிறேன்! இதை ஆராய்ந்து குமைந்ததிலே. அவளிடம் வீச ஒரு அஹிம்சா ஆயுதம் கிடைத்துவிட்டது!

"இதோ பார்! நமக்காக இந்த மேஜையா? மேஜைக்காக நாமா? இந்த வராந்தா நம் சௌகரியத்திற்கா அல்லது அதன் சௌகரியத்திற்காக நாமா? இந்த வீடு நமக்காகவா? வீட்டுக்காக நாமா? அந்த அலமாரி நமக்கு அடிமையா? அதற்கு அடிமை நாமா?" என்று கேட்டேன்.

அவள் விழிகளைக் கூர்மையாக்கிக் கொண்டு கொட்டக்கொட்ட விழித்தாள்.

'வேறு ஏதாவது நினைத்துவிடப் போகிறாளே, பாவம்,' என்று தோன்றிற்று!

"என் சௌகரியத்துக்காகத்தான் நீ, உன் சௌகரியத்திற்காக நான் இல்லை' என்று நான் சொல்லிவிடவில்லை. பயப்படாதே! நாமிருவரும் ஒருவருக்காக ஒருவர் இருக்கிறோம்! ஆனால், இந்தச் சாமான்கள் விஷயத்திலே நீ இப்படி நினைத்துவிட கூடாது! நமக்கு வசதிக்காகத்தான் அவை! நீ அவற்றுக்காக இப்படி அலட்டிக்கொண்டு உயிரைவிட்டுக் கொண்டு வேலை செய்வதால் எனக்காகத்தான் நீ இந்த வீட்டை மேய்க்கிறாப்போல் இருக்கிறாய்! உனக்கும் கொஞ்சம் வெளியிடப் பழக்கம் வேண்டாமா? நசபிசவென்று வீட்டோடு கிடந்து உழலுவானேன்? கொஞ்சம் உன் சொந்த வேலைகள் சிலவும் பார்த்துக்கொள்ளேன்..... தையல், பாட்டு, படிப்பு...."

"ஆமான்னா! நிஜந்தான்!' என்று வியப்பு மேலீட்டால் மலர விழித்தாள் அவள்.

அதற்குப் பிறகு அவளிடம் மாறுதல் கண்டேன். தன் வேலைகளில் மெல்ல மெல்ல நிதானம் அடைந்தாள் அவள்.

ஆனால், ஆனால்..... நான் எதிர்பார்த்தது வேறு. இன்றைய நிலைமையா அன்று நான் எதிர்பார்த்தேன்?

இன்று நான் கேட்பது இந்தக் தினுசான வினா! 'கொடியிலே வேஷ்டியில்லையே! நேற்றுத் தோய்ந்திருக்கக் கூடாதா? என்று கேட்கிறேன்.

"இப்போதான் தோய்க்கப் போகிறேன் - நேற்று மத்தியான்னம்தான் ஒழிந்தது - வெய்யிலில் தோய்க்காட்டால் என்ன மோசம்? கொடியிலே வேஷ்டியில்லாட்டா, உள்ளே பெட்டிக்குள்ளே இருக்கிறதை எடுத்துப் போடுங்களேன் நாலு! தினமும் வீட்டில் தோய்த்தால் துணி வீண்! நாலு வேஷ்டி வெளியிலே எடுத்துப் போட்டு அப்பப்போ வெறுமனே நனைச்சுக் கசக்கிக் கட்டினால்,

அப்புறம் வண்ணானுக்குப் போட்டால் ஆச்சு! நேற்று போட்ட வேஷ்டியைத்தான் இன்று கட்டணும் என்று சாஸ்திரமா? நமக்காக வேஷ்டிகளா? வேஷ்டிகள் கோசரம் நாமா?"

இந்த ரீதியில் வருகிறது அவளது வினா! அவள் என்னைக் கிண்டல் செய்கிறாளோ என நினைக்க வேண்டாம்! என்னைக் கிண்டல் செய்வது என் மனசேதான்!

'ஏதோ புதுக் குடித்தனக் குஷியிலே அவள் ஒரே நறுவிசு வெறி கொண்டிருக்கிறாள்! நாளடைவிலே, புதுமைப் பிரமை அடங்கும்பொழுது, நிதானப்பட்டுவிடுவாள்!' என்று அறியாமல், அவள் போக்கிலே அவளை விடாமல், நானே அவளை வெளியுலகமுடன் தொடர்பு கொள்ளத் தூண்டிவிட்டேன். இன்று மாதர் சங்கமொன்றிலே மாதரசி அவள்.

'அத்தனை வெறியாகப் பிடித்திருந்த நறுவிசு வெறி இப்படி மாயமாய்ப் போகுமா?' என மலைப்பு வேண்டாம்!

நறுவிசு அவளுடனேயே ஒன்றிவிட்டது! நான் ஏதாவது சொல்லப்போனால், நறுக்கென பதில் சொல்லிவிட்டு 'விசு'க்கென எழுந்து போய்விடுகிறாளே!

**********

(சுதேசமித்திரன், மே 14,1950)